இணைப்பு I.

[436-ம் பக்கத்திலுள்ள 570-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

இம்மாநிலத்தில் கடந்த சில தினங்களாக சில்லறை நாணயங்கள் பற்றுக்குறை இருந்து வருவது, இந்திய அரசின் நாட்டத்திற்கும் இந்திய ரிசர்வ் வங்கியின் நாட்டத்திற்கும் கொண்டு வரப்பட்டது.

2. பம்பாயில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கியில் சில்லறை நாணய இருப்பு நிலைமைக்கிணங்க, சில்லறை நாணயங்களைத் தமிழ் நாட்டுக்குப் போதிய அளவு அனுப்பி வைப்பதற்கு அவசியமான நாணயங்கள் உற்பத்தியும் இந்திய ரிசர்வ் வங்கி அவற்றை அனுப்பி நடவடிக்கை எடுக்குமாறு அவ்வங்கி கேட்டு கொள்ளப்பட்டதாக வைப்பதும் அண்மையில் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. இந்திய அரசு தெரிவித்துள்ளது.

3. சில்லறை நாணயங்களின் பற்றுக்குறை சீரடைய நாணயச் சாலைகளில் சில்லறை நாணயங்களின் உற்பத்தியை உயர்த்துவதற்குப் பல்வேறு ஏற்பாடுகளை தாங்கள் ஏற்கெனவே எடுத்துக் கொண்டுள்ளதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது. சில்லறை நாணயங்களை அதிக அளவு உற்பத்தி செய்வதும், நாணயங்களை உருக்குவதற்காகப் பயன்படுத்துவதை நீக்குவதற்கு நாணயங்களில் உள்ள உலோகக் கலப்பு வீதத்தை மாற்றி அமைப்பதும், இந்த ஏற்பாடுகளில் அடங்கும். நாணயச் சாலைகளில் சில்லறை நாணயங்களை உருக்கும் நோக்கத்துடன் அவற்றை உருக்குவதையும் பதுக்கிவைப்பதையும் சட்டப்படி ஒரு குற்றமாகச் செய்து, 1971-ஆம் ஆண்டு சில்லறை நாணயங்கள் (குற்றங்கள்) சட்டம் இயற்றப்பட்டுள்ளது. நாணயங்களை சேமித்து வைத்து லாபகரமாக அவற்றில் வாணிபம் செய்வதற்கு நாணயங்களை வாங்க வருபவர்களின் நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டு, ரிசர்வ் வங்கியின் பணம் வழங்குமிடங்களில் நாணயங்கள் வழங்கப்படும்

அளவும் கெடுபிடியாக்கப்பட்டுள்ளது. இதற்கு மாறாக வங்கிகள், அரசுத்துறைகள், போக்குவரத்து நிறுவனங்கள், ஆலைகள், ஓட்டல்கள், கம்பெனிகள், இதர நிர்வாக அமைப்புகள் போன்ற நிறுவனங்களுக்கு உண்மையான வியாபார நோக்கங்களுக்காகச் சில்லறை நாணயங்கள் கணிசமான அளவுக்குத் தாராளமாக வழங்கப்பட்டுள்ளன. உள்ளூரில் ஏற்படும் சில்லறை நாணயப் பற்றாக்குறைகள் எப்போதுமே முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட ஓரிடத்திலிருந்து புகார்கள் வரப்பெற்றதும் உடனடியாக ரிசர்வ் வங்கி புகாரைப் பரிசீலித்து, வங்கி இருப்பு நிலைமைக்கு இணங்க, உள்ளூரில் ஏற்பட்டுள்ள சில்லறை நாணயப்பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு சில்லறை நாணயங்களைக் கூடுதலாக அனுப்பி வைக்கிறது.

4. தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி மாநிலங்களில் உள்ள ஏஜன்சி வங்கிகள் வைத்துவரும் சில்லறை நாணய நிலையங்கள் பலவற்றிற்கு சில்லறை நாணயங்கள் அனுப்பிவைக்கும் பணியை, நாணய இருப்பு நிலைமையையும் வரப்பெறும் தேவைப்பட்டியல்களையும் அனுசரித்துத் தாம் கவனித்து வருவதாக சென்னையில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. சில்லறை நாணய நிலையக் கணக்குகளையும் சென்னையில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கியே வைத்து வருவதால், மிகக் குறைந்த இருப்புடைய சில்லறை நாணய நிலையங்களுக்கு அவற்றின் தேவைப் பட்டியலுக்குக் காத்திராமலேயே அவசியமான போதெல்லாம் சில்லறை நாணயங்களை அனுப்பி வைப்பதற்குச் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அண்மையில் சில மாதங்களாக நாணயச் சாலைகளிலிருந்து வரப்பெறும் நாணயங்களின் அதிக அளவு ஒதுக்கீட்டைக் கொண்டு, சில்லறை நாணய நிலையங்களுக்கு நாணயங்களை அனுப்பி வைக்கும் அளவை அதிகரிக்கக்கூடும் என்று இந்திய ரிசர்வ் வங்கியும் தெரிவித்துள்ளது.

The shortage of Small Coins in this State for the past few months was brought to the notice of the Government of India as well as of the Reserve Bank of India.

1973 டிசம்பர் 3]

2. The Government of India have stated that the Reserve Bank of India, Bombay has been requested to take necessary action to despatch adequate quantities of Small Coins to Tamil Nadu, consistent with the stock position of the Bank.

3. As regards the steps taken to relieve the shortage of Small coins, the Government of India have stated that they have already taken various measures to step up the production of small Coins in Mints, including changing some of the coinage alloys as to obtain a higher rate of production as also to eliminate the risk of their being diverted for melting purposes and that the Mints ' production of Small Coins and the issues by Reserve Bank of India has lately gone up considerably. The Small Coins (Offences) Act, 1971, has also been enacted, making melting of small coins and hoarding such coins with a view to melting, an offence in law. The scale of issue at the Reserve Bank's counters has also been tightened with a view to deterring the activities of persons who are usually found to collect the coins for hoarding and trading at profit. On the other hand, the issues to institutions such as banks, Government departments, transport undertakings, mills, hotels, companies and other organisations for *bona fide* business purposes have been liberalised considerably. Local shortages are always dealt with on priority basis. As soon as complaints are received from any particular centre, the Reserve Bank investigates into the complaint and despatches additional quantity of small coins to the extent necessary, consistent with the Bank's stock position, in order to remove such local shortages.

4. The Reserve Bank of India, Madras, has stated that despatch of small coins to the various Small Coin Depots maintained by agency Banks in the States of Tamil Nadu, Kerala and Pondicherry is being attended to by it, consistent with the stock position and based on indents received. As the Small Coin Depot accounts are also maintained by Reserve Bank of India, Madras,

[1973 டிசம்பர் 3

special remittances, wherever necessary, are also arranged to such of the Small Coin Depots having low balances, without waiting for their indent. The Reserve Bank of India has also stated that with increased allotment of coins being received from the Mints in recent months, it would be increasing the quantum of coins to the Small Coin Depots.

இணைப்பு II.

[470-ம் பக்கத்தில் 38-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]

	மாவட்டம்.	ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்).
	(1)	(2)
1.	சென்னை மாநகரம்	10·00
2.	செங்கற்பட்டு	2·00
3.	தென் ஆர்க்காடு	2·00
4.	வட ஆர்க்காடு	2·00
5.	தருமபுரி	2·00
6.	சேலம்	2·00
7,	தஞ்சாவூர்	3·00
8.	திருச்சிராப்பள்ளி	3·00
9.	கோயம்புத்தூர்	3·00
10.	நீலகிரி	2·00
11.	மதுரை	3·00
12.	இராமநாதபுரம்	2·00
13.	திருநெல்வேலி	2·00
14.	கன்னியாகுமரி	2·00
	மொத்தம் ..	40.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS